வேளாளர் வாழ்க்கை நம் நாட்டுச் சமுதாய வாழ்க்கையில் வேளாளர் மேம்பாட்டைக் கருதி படலையார்குளம் வேளாண் பெருமகனுர், வழக்கறிஞர் அய்யாசாமிபிள்ளை அவர்கள் போன்ருர் சிலர் சமூக முன்னேற்றத்திற்கு அடிப்படையாகிய கல்வியை இவர்களிடை மிகுதியாய்ப் பரப்பினுற்ருன் பண்டைப்பெருமையை ஒரு சிறிது இவர்கள் எய்த முடியுமெனக் கண்டு அக்கல்விப் பரப்புக்காக சென்ற 1914ல் நெல்லை நகரில் வேளாளர் கல்வி அபிவிருத்தி சங்கம் அமைத்து, அதைப் பதியவும் செய்தனர். அதன் வாயிலாய் வேளாளர் பலர் உயர்தரக் கல்வி கற்று

**வேளாளர் கல்வி அபிவிருத்தி சங்கம் நிறுவியது பதிவு எண்**

நல்வாழ்வு எய்தியது கண்ட வேளாண் பெருமக்கள் பலர் அதன் வளர்ச்சிக்கு இப்பவும் அரும்பாடுபடுகின்றனர். அவர்கள் முயற்சியால் மாணவர்கட்கு உணவுக்கும் இருப்புக்கும் ஓர் பெரும் விடுதி கட்டப்பட்டு முடிந்திருக்கிறது. அம்முயற்சியினை இன்றும் தொடர்ந்து நடத்திவரும் பெருமக்கள் பலர் உலைவிலா ஊக்கத்தினால் மேற்படி விடுதி விழுமிய முறையில் நடைபெறுவதுடன், சங்கமும், தகுதியுடை மாணவர்கள் பலருக்குக் கற்கப் பொருள் உதவி புரிகின்றது. அவர்கள் முயற்சிக்கு வேளாளர் அனைவரும், துணைபுரிவார்களாக.

சென்ற பல ஆண்டுகளாக, இனவினமாய் சங்கங்கள் அமைக்கப்பட்டு, அந்தந்த இனத்தினர் முன்னேற்றத்துக்காய பொதுப்பணிகளை அவைகள் வாயிலாய்ச்செய்து, பலஇனத்தினர் முன்னணியில் வந்துகொண்டிருப்பதை அறிந்த வேளாண்

**தூத்துக்குடி வேளாளர் வாலிபர் சங்கம் தோற்றம் மாற்றம்**

பெரு மகனார் காலஞ்சென்ற ஆத்தூர் சிதம்பரம்பிள்ளை அவர்கள் தூத்துக்குடியில் வேளாண் மக்களிடைப் பொதுப் பணிசெய்து அவர்கள் நிலையை முன்னேறச்செய்ய விழைந்து, நெல்லை மாவட்டப் பெருமக்கள் பலரைத் தூத்துக்குடியில் 11—5—28ல் கூட்டி வேளாளர் சங்கம் நிறுவ முயற்சித்தனர். அம்முயற்சியின் பயனாய் தூத்துக்குடியில் "வேளாள வாலிபர் சங்கம்" ஒன்று உடன் நிறுவப்பட்டது. அதற்கு தூத்துக்குடி ஆண்டாள் தெருவில் சுமார் ஒரு ஏகர் பரப்புள்ள தன் இடத்தை சுற்றிலும் சுவர் கட்டி அதனுள் அலுவலக கட்டிடம் ஒன்றும் அமைத்து காலஞ்சென்ற சி. வ. நல்லபெருமாள் பிள்ளையவர்கள் மனமுவந்து உதவினர்.(ஆங்கு பந்தடி மேடை யொன்று தூத்துக்குடிலேயே ஒப்பிலாததாய் அமையவும், பூப்பந்து மேடை, பார், முதலியன நிறுவப்பெறவும் விளையாடி வந்த சோர்வை நீக்க பூங்காவையும் வானுயர் மரங்களும் வளரவைக்கவும், தூத்துக்குடி வேளாண் மக்கள் பலர் ஏற்பாடு செய்தனர்.) வேளாளர் வாலிபர் சங்கம் வளர வளர அதனை வாலிபர் சேவைக்கென இல்லாது, பொது மக்களின் நலனுக்காம், கழகமாக்க வேளாண் பெரியோர் பலர் விரும்பினர்.

அன்னர் விருப்பத்திற்கேற்ப சென்ற 27–10–43ல் மேற்படி வேளாளர் வாலிபர் சங்கம் "வேளாளர் சங்கம்" என மாற்றப்பெற்று ஷை 'வேளாளர் சங்கமும்' நெல்லை மாவட்ட கழகப் பதிப்பகத்தில் No. S 4 of 43—44. எண்ணுகைப் பதியவும் பெற்றது. ஷை வேளாளர் சங்கத்தின் நன்முயற்சியால் வேளாண் குடும்பங்களில் நடக்கும் சிறப்புகளுக்கும் உதவுவதற்காக பாத்திரங்கள் ஒரு சில வாங்கப்பெற்று அவைகளைப் பல சிறப்புகளுக்கு ஷை சங்கம் உதவியும் வருகிறது, ஷை சங்கத்தினரின் பெருமுயற்சியாலும் உழைப்பாலும் சமூகப் பணிக்கு உதவியாய் இருக்கும் நோக்கத்துடன் சென்ற 21—9—48ல் "தமிழ்நாடு பொருள் நிலையம் லிமிடெட்" தூத்துக்குடியில் தொடங்கப் பெற்றிருக்கின்றது. ஷை நிலையத்தின் வருவாயில் பத்து சத விதம் சமூகப் பணிக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு மொத்தப் பங்குகள் 20,000 பங்கு ஒன்றுக்கு ரூபாய் பத்து (10) இதுகாறும் ...... பங்குகள் தான் எடுக்கப்பட்டிருக்கின்றது. அவ்விதம் எடுக்கப்பட்ட பங்குகளிலும் பங்கு ஒன்றுக்கு பாதித்தொகைதான் கேட்கப்பெற்று இப்பொழுது பொருள் நிலையத்தின் மூலதனமெல்லாம் ரூபாய் 22030 தான். இச்சிறு தொகையை வைத்தே சென்ற ஆண்டு ஷை நிலையத்தார் ரூபாய் 1971 வருவாய் காண்பித்திருக்கின்றனர். எனின், பங்குகளெல்லாம் வேளாளரால் எடுக்கப்பெற்று பஙகு தொகைகள் முழுமையும் நிலையத்தாரால் கேட்கப்பெற்று மூலதனமாய்ச்சேர்ந்துவிட்டால் பெருந்தொகையன்றோ வருவாயாகக் கிட்டும்! அதனல் சமூகப்பணிக்குக் கிடைக்கும் தொகையும் மிகுதியாகு மன்றோ! எச்சமூகமும் வாழ்வதும் தாழ்வதும், அதன் செல்வத்தாலும் வறுமையாலும்தான் என்பதை இன்று நாம் காண்கிறோம். நம் சமூகமும் வாழ்வுற வேண்டுமெனில் அதன் பொருளாதார நிலை ஓங்கவேண்டும். அதற்காவன செய்வதற்கு நிதி வேண்டும். அந்நிதி திரட்ட பெருந் துணையாய் இருக்கும் இத் 'தமிழ்நாடு பொருள் நிலையத்தை' தமிழ்நாடு யெங்கணும் பரப்பி வருவாயைப் பெருக்கப் பெரிதும் விழைந்திருக்கின்றனர். ஷை பொருள் நிலையத்தார்கள் அதில் எடுக்கும் பங்குப்பட்டயம் ஒவ்வொன்றும் சமூக வாழ்

"வேளாளர் சங்கம் தூத்துக்குடி" நிறுவியது பதிவு எண் No. S. 4. of 43-4

தமிழ்நாடு பொருள் நிலையம் லிமிடெட் நிறுவியது பதிவுஎண் ......

வுக்கோர் சாசனப் பட்டயம் என எண்ணி வேளாண் மாந்தர் அனைவரும் தமிழ்நாடு பொருள் நிலையத்தில் பங்குகள் எடுப்பார்களாக.

பிறவினக்காய்தலின்றி தம்மினவளர்ச்சியில் ஈடுபாடு குற்றமுடைத்தாகாது. ஏனைய இனத்தவறின் இன வளர்ச்சி ஈடுபாட்டை இன்றும் கண்டு வருகின்றோம். வேளாள மாந்தர் இனியும் வாளா விருந்தால் அவர்கள் சமூகம் வளராதே! பசியால் அழும் குழந்தையை அதன் தாயன்றோ தூக்கி பால் கொடுக்கின்றனள் ஏனைத்தாயார்கள் அதற்கு அவ்விதம் பாலூட்ட நாம்காண்கின்றிலமே! எனப்பல எண்ணி தூத்துக்குடி வேளாள சங்கத்தினர் 4—2—51ல் ஷை சங்கத்தின் ஆண்டு விழாவில் நெல்லை மாவட்டச் சைவ வேளாள மாநாடு ஒன்றைக் கூட்ட வேண்டுமென்று தீர்மானித்தனர். வேளாளர் பொது நலச் சேவைக்காய திட்டங்களை அக்கூட்டத்தின் வாயிலாய் வகுக்கலா மென்பதே அத்தீர்மானத்தின் நோக்கம்

**நெல்லை மாவட்டச் சைவ வேளாள மாநாடுகூட்டி தூத்துக்குடி வேளாளர் சங்கத் தீர்மானம் தேதி 4-2-51**

மாவட்டக் கூட்டத்தை ஆரம்பிக்க அவர்கள் திட்டம் வகுக்கத் தொடங்கினபொழுது, ஷை சமூகக் கூட்டக் கருத்து வேளாளருக்குப் புதிதாதலால் நெல்லை வேளாளர் கல்வி அபிவிருத்தி சங்கத்தினரைக் கலந்து நெல்லை மாவட்டப் பெருமக்கள் பலரைக் கூட்டி ஷை மாவட்டக் கூட்டம் கூட்டுவதைப் பற்றி அக்கூட்டத்தில் முடிவு செய்வதென்ற தீர்மானத்திற்கு வந்தனர். சமூக நலம் பேணும் பெரியார் இருபத்தி நால்வர் நெல்லை வேளாளர் கல்வி அபிவிருத் சங்கக் கட்டிடத்தில் 11-3-51ல் ஷை மாவட்டக் கூட்டத்தைப் பற்றி ஒரு முடிவுக்கு வரக்கூட்டம் கூட்டினர். மாவட்டப் பெருமக்களில் நூறவர்க்கு மேற்பட்டவர்கள் அழைக்கப் பட்டு வந்திருந்தனர். கூட்டத்தில் நெல்லை மாவட்டச் சைவ வேளாளர் மாநாடு கூட்ட வேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டது. கூட்டத்திலிருந்த ஆதரவைப் பார்த்த தூத்துக்குடி வேளாள சங்கத்தார் மாநாட்டை தூத்துக்குடியில் நடத்த

**11-3-51ல் நெல்லை மாவட்ட பெருமக்கள் கூட்டம் மாநாடு கூட்டத் தீர்மானம் கூட்டத்தில் மக்களிடை மாநாட்டுக்கு ஆதரவு ஆரவாரமும்.**

முன் வந்தனர், உடன் ஷி மாநாட்டுக்குத் தக்கதோர் வரவேற்புக்கூட்டம் அக்கூட்டத்திலேயே அமைக்கப்பெற்று அக்கூட்டத்துக்கு மேற்கொண்டும்உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ள அதிகாரமும் கொடுக்கப்பட்டது.

வரவேற்புக்கூட்டத்திற்கு நெல்லை, லயன் கம்பெனி அதிபர் திரு. சண்முகம் பிள்ளை அவர்களைத் தலைவராயும்

| | | | |
|---|---|---|---|
| | திரு. | N. சங்கரநாராயணபிள்ளையன் | அவர்கள் |
| வரவேற்புக்கூட்டம் | திரு. | A. S. சிவன்பிள்ளை | ,, |
| செயற்குழு | ,, | K. A. சிவஞானம் பிள்ளை | ,, |
| பாராட்டுத்தொடக்க | ,, | K. L. கந்தசாமி பிள்ளை | ,, |
| வேலை | ,, | சங்கரலிங்கக் கவிராயர் | ,, |

ஆகிய ஐவர்களைத் துணைத்தலைவர்களாயும்,

| | | |
|---|---|---|
| திரு. | S. N. சின்னக்கண்ணுப் பிள்ளை | அவர்கள் |
| ,, | RM. ஆனந்தம் பிள்ளை | ,, |
| ,, | T. N. C. கந்தசாமி பிள்ளை | ,, |
| ,, | T. K. தீர்த்தாரப்ப முதலியார் | ,, |

ஆகிய நால்வர்களை அமைச்சர்களாயும், திரு. வீ. ச. சண்முகம் பிள்ளை அவர்களை பொருளாளராயும் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், மாநாட்டு அலுவல்களில் ஈடுபட அவ்வரவேற்புக் கூட்டத்தினரிலிருந்து ஓர் செயற்குழுவும் அமைக்கப்பட்டது. அதற்கு தூத்துக்குடி திரு. M. சண்முகம் பிள்ளை அவர்களை கூட்டுவிப்பவாாக தேர்ந்தெடுக்கப் பட்டது.

வரவேற்புக் கூட்டத்தினர் உயர்திரு. P.T. இராசன் அவர்களை தலைவராய்த் தேர்ந்தெடுத்து அவர்களும் தலைமைபூண இசைந்தனர், கொடியேற்றுதலை குடந்தை திரு. இரத்தினசபாபதி செட்டியார் அவர்களும், திருப்புவிழாவை இராசபாளையம் பண்ணையார் திரு. இராமசுந்தம்ம் பிள்ளை அவர்களும் ஒப்புக்கொண்டார்கள். பின்னர் மாநாட்டில் சொற்பொழிவுகளாற்ற வேளாள குலதிலகங்களாம் உயர்திருவாளர்கள், இரா. பி. சேதுப்பிள்ளை, ஆ. முத்துசிவன், கோ. சுப்பிரமணிய பிள்ளை, ஆகியோர் முன் வந்ததும் வரவேற்புக் கூட்டத்தினரின் மாநாட்டுத் தொடக்க வேலையில் மாநாட்டு நிகழ்ச்சிப் பகுதி முற்றுப் பெற்றது.

**செயர்குழு கூட்டங்கள்**

மாநாட்டு நாளை முதலில் 7-6-51ல் செயற்குழுவினர் குறிப்பிட்டனர். தலைவர் அவர்கள் அதுசமயம் எதிர்பாராத வண்ணம் அயலூரிலிருக்கவேண்டி ஏற்படவே மாநாடு 7-7-51 தெய்திக்கு ஒத்திவைக்கப்பட்டது.

**மாநாட்டு தெய்தி குறிப்பிடுதல்**

மாநாடுகூட்டுவதின்நோக்கத்தைவிளக்கி வரவேற்புக் கூட்டத்தார் துண்டு வெளியீடு வழங்கினார்கள். அவ்வெளியீட்டில் மாநாடு கூடுவதின் கருத்தை அவர்கள் தெளிவாய் விளக்கியிருக்கியிருந்தனர்.

**மாநாடு எதற்கு துண்டு வெளியீடு**

மாநாடு நிகழ்ச்சிகளைகுறிப்பிட்டு பிரிதோர் வெளியீடும் வரவேற்பு குழுவினர் வெளியிட்டிருந்தனர். அதில் மாநாட்டுக்கு அன்பர்கள் தீர்மானங்கள் கொண்டு வருவதை வரவேற்று அதற்குக்காலமும் குறிப்பிட்டிருந்தனர். குறிப்பிட்ட காலத்திற்குமுன்னேயே செயற்குழுவுக்குத் தீர்மானங்கள் வந்து குவிந்தவண்ணமாயிருந்தன, அவைகளை செயற்குழு ஆய்ந்து தொகுத்து வரவேற்புக் குழுவினருக்கு உதவியது.

**மாநாட்டுக்குத் தீர்மானங்கள் உறுவாகியவகை**

வரவேற்புக் கூட்டத்தினர் ஷை விதம் தொகுக்கப்பெற்ற இருபதுக்கு மேலாகிய தீர்மானங்களை வரவேற்புக் கூட்ட உருப்பினர்களுக்கு அனுப்பி மாநாட்டில் கொண்டு வருவதற்கு ஏற்ப அவைகளை உருவாக்கி அமைப்பதற்குக் கூட்டத்தையும் கூட்டினர் அக்கூட்டத்தில் உருவாக்கப் பெற்ற தீர்மானங்கள் இருபது, அவைகளை மாநாட்டில் ஆலோசனைக் குழுவின் ஆய்தலுக்கு விட்டு அவர்கள் திருத்த நிறுத்தல்களுடன் நிறைவேற்றிக் கொள்கிறதென முடிவு செய்யப்பட்டது.

**நெல்லைமாவட்டம் முழுமையிலும் மக்களது திரண்ட ஆர்வம்**

மாநாட்டில் கொண்டு வரவேண்டுமென்று சமூக அன்பர்கள் அனுப்பியிருந்த தீர்மானங்களின் எண்ணிலிருந்தும் தன்மையிலிருந்தும் மாநாடு மக்கள் எண்ணத்தை எவ்வாறு கவர்ந்திருக்கின்றது எனக்கண்ட வரவேற்புக் கூட்டத்தினருக்கு ஊக்கம் மிகுந்தது. மாவட்டம் முழுமையும் சென்று மாநாட்டுக் கருத்தைப் பரப்ப எண்ணினார்கள். நெல்லை வட்டத்திலும் பல்வேறிடங்களுக்கும் பரபரப்புடன் சென்று மாநாட்டுநோக்கங்களைப் பரப்பினர், மாநாட்டு நாள் சமீபித்துவிடவே முதலில் வகுத்த திட்டப்படி நெல்லை வட்டம் முழுமையும் சென்று மாநாட்டுக் கருத்தைப் பரப்ப முடியாமற் போய்விட்

டது. அவர்களால் பார்க்க முடிந்த நெல்லை வட்டத்தின் ஒரு சில பகுதிகளிலிருந்தே அவர்களுக்கு கிடைத்த பணமுடிப்பும் ஆதரவும் அவர்களை மாநாடைச் சிறப்பாய் நடத்த மேலும் மேலும் ஊக்கியது.

## மாநாட்டு அமைப்பு

மாநாட்டு நாள் சமீபித்ததும் செயற்குழுவினர் மாநாடு அலுவல்களைப் பிரித்து இதனை இவர் முடிப்பரென ஆய்ந்து அததனை அவரவரிடம் ஒப்புவித்தனர் கீழ்கண்ட அலுவலாளர்களை தேற்ந்தெடுத்து அவரவர்களுக்கு அந்தந்த பொருப்பையும் கொடுத்னர்.

பந்தல் குழு
உபசரிப்புக்குழு
உணவுக்குழு
விளம்பரக்குழு
நிதிக்குழு முதலி
யன அமைத்தல்

| அலுவலாளர்கள் | பொறுப்பு |
|---|---|
| திரு. வீ. ச. சண்முகம் பிள்ளை<br>,, மீ. சண்முகம் பிள்ளை | பந்தல் அமைப்பு<br>அலங்காரம் |
| ,, க யீ. சு. நடேச பிள்ளை<br>,, வீ. ச. சண்முகம் பிள்ளை<br>,, வெ. கலியாணசுந்தரம் பிள்ளை | உணவு |
| ,, க யீ. க. நடேச பிள்ளை<br>,, கு. லெ. கந்தசாமி பிள்ளை<br>,, இ. வெண்ணிமாலை பிள்ளை<br>,, மீ. சண்முகம் பிள்ளை | விருந்தினர்<br>உபசரிப்பு |
| ,, அண்ணாமலைச் செட்டியார்<br>,, இ. வெண்ணிமாலை பிள்ளை<br>,, சு. குத்தாலிங்கம் பிள்ளை<br>,, முத்துராமலிங்கம் பிள்ளை | விளம்பரம்<br>வரவேற்பு |
| ,, ப. முனியசாமி பிள்ளை<br>,, பேச்சியாபிள்ளை | பொருள் |
| ,, சு. குத்தாலம் பிள்ளை | உடல்கலம் |

அலுவலாளர்கள் அவரவர் அலுவல்களை அழகுபெற முடித்தனர். தூத்துக்குடி ஆண்டாள் தெரு, வேளாளர் சங்க நிலையத்தில் ஓரிரவில் அரம்பையர் ஆடும் அரங்கேபோன்று,

அலங்கல் ஆங்காங்கு அழகுபெறத்தொங்க இரத்தினக் கம்பளமும் வண்ணமெத்தைத் திண்டுகளும், வண்மையுடன் மிளிர்ந்து மன்னவர் மன்னவன் கொலு மேடையோ என அமைந்த தலைவர்கள் மேடையுடன், விண்ணவர்கோன் வீற்றிருக்கும் ஆயிரக்கால் மண்டபமோ பண்டு பாண்டிய மன்னர் தங்கொலுக்கூடமோ என எழுந்தது மாநாட்டுப் பந்தல். பந்தர்க்கால்களில் ஆங்காங்கு சேக்கிழார், சிவஞானமுனிவர் அப்பர் முதலியோரின் பொன் மொழிகள் பொறிக்க பெற்ற அட்டைகள் மாநாட்டில் தெய்வமணம் கமழச் செய்தன. பிறவிடங்களில் தொங்கின அட்டைகளில் சில ஏத்த தறிந்து உயிர்வாழ்ந்த உத்தம வேளாண் மக்களை நினைவூட்டுமுகத்தான் அன்னூர் சமூகத் தொண்டையும் அதனுல் அவரடைந்த அமர வாழ்வையும், காண்பார் மனதில் பதியவைத்து, அவர்தமை, இன்றே இறங்குவோம் இனத்தொண்டில் எனக் : கங்கணம் கட்டச்செய்யும் விதத்தில் பொருள் செறிந்து விளங்கின.

பந்தர்க் காட்சிதான் இவ்வாறென்னின் கொடியின் கண்கவர் வனப்பும் உள்ளுரைப் பொருளும், நவில்தொறும்நூல் நயம் போன்று காணுந்தோறும் புதுப்புதுப்பொருள் செறிந்த புதுமை உணர்ச்சியை ஊட்டியது. கொடியை ஒருதரம் பார்த்தவர் அன்று அவர் குடி அரசராயிருந்ததை நினைப்பர்: இருதரம் பார்த்தவர் அவர்தம் குலத்தொழிலை உணர்வர், மேலும் பார்த்தவர் அன்னூர் அறவிலை வணிகராய் உலகவர்க்கு உணவூட்டுபவராய் நடுவு வழங்கும் நாயகர் களாய் வாழ்ந்த நாட்கள் இடையில் மறைந்தன எனினும், விரைவில் வரும் வரும் என ஊக்கமும் உயர்வும், உள்ளமது அடைவதை உணர்வர். இனிமாநாட்டுத் தொண்டாற்ற முன் வந்த தொண்டர்கள், தொண்டர் படைத் தலைவர் திரு, பா. ச. முத்தையாதாஸ் பிள்ளை அவர்கள் தலைமையில் இட்டபணியைத் திறம்பட ஆற்றப் பயிற்சி பெற்றனர். உணவுச்சாலையும் வருபவர்க்கு விடுதிகளும், தக்கவசதியுடன் ஏற்பாடாயின.

1126ம் ஆண்டு ஆனித்திங்கள் 23ம் நாள் நெல்லை மாவட்ட் வேளாண் மக்களுக்கு ஓர் பெருநாள் திருமந்திரநகர் வேளாளர்க்கு ஒரு திருநாள் அன்று திருமந்திரநகர் வேளாண்



மாநாட்டுத்தலைவர்களின் ஊர்வலத்தின் ஒரு பகுதி.



திரு **M. C. S.** ரத்னசபாபதி செட்டியார் அவர்கள் கொடியேற்றுவிழா சொற்பொழிவு நிகழ்த்துகிறார்கள்.

மக்கள் நகரெங்கும், ஆங்காங்கு தோரணங்கள் கட்டியும் தலை வர், திறப்பாளர், கொடியேற்றுபவர் ஆகியோருக்கு வரவேற் புக்கால்கள் நாட்டியும், தலைவர் முதலியோர் வருகையை குறிப் பிட்ட காலம் அணுக அணுக பெரிதும் எதிர்பார்த்து தேரோ டும் தெருக்களிலும் ஏனைய வீதிகளிலும் திரள் திரளாய்க் குழுமி நின்றனர். குறிப்பிட்ட காலத்தில் தலைவர் முதலியோர் 'இராசன் வாழ்க' 'இராமசுந்தரம் வாழ்க' 'இரத்தினசபாபதி வாழ்க' என்றும் வாழ்த்துச் சொற்கள் ஒலிக்க பூவால் அலங் கரிக்கப்பட்ட, இயந்திர ஊர்தியில் நகர வீதிகளின் வழியாய் மாநாட்டுப் பந்தலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். வழி நெடுக மக்கள் ஆரவாரத்துடன் ஊர்வலத்தில்கலந்துகொண்டே வந்து, மாநாட்டுப் பந்தலுக்குள் மக்கள் சென்றதும் மக்களின் கூட்டமும் ஆரவாரமும் கடல் திரண்டன்ன காட்சியை அளித் தது.

தலைவர்கள் மேடையில் அமர்ந்தனர், இறை வணக் கம் முடிந்ததும் குடந்தை நகராட்சி மன்றத் தலைவர் திரு. இரத் தினசபாபதிச் செட்டியார் அவர்கள் கொடியேற்றி கொடியின் தத்துவத்தை விளக்கிக் கூறினார்கள். புலியும் மீனும் கொடியில் எழுச்சியுற்ற நிலைமையில் இருப்பதையும், வில்லிலோ அம்பு மாட்டப்பட்டு எய்யப்படும் நிலையில் இருப்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டி இவை நம் வேளாண் மக்கள் எழுச்சியுற்றிருக் கின்றனர் என்பதை குறிக்கின்றன என்றார்கள், பின், கொடி யில் காணும் ஏரையும் தராசையும் குறிப்பிட்டு அவைகள் நம் குலத்தொழிலாம் உழவையும் வாணிபத்தையும் காண்பிப் பதுடன் ஏர் பொறிக்கப்பட்டிருக்கும் முறை நாம் உழுவித்து வாழ்வதைவிட உழுது வாழ்வதையே பெரிதும் போற்றுகின் றோம் என்பதையும் தராசின் நாக்குமுனை நடுவனில் நிற்பது நியாயம் வழங்குவதில் சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து ஒருபாற்கோடார் நம் வேளாண் மக்கள் என்பதை யும் காட்டுகின்றதென நயம்பட எடுத்துரைத்தனர்.

கொடி வணக்கம் முடிந்ததும் இராசபாளையம் பண் ணையார் திரு. இராமசுந்தரம் பிள்ளை அவர்கள் மாநாட்டைத் திறந்து வைத்தனர். திறப்புரையில் சென்ற காலத்தின் சிறப்பி

னைக் கூறிய பிள்ளையவர்கள், நிகழ்காலச் சிறுமைகளைத் தயங்காது எடுத்துக்காட்டி சமூக வளர்ச்சிக்கு இன உணர்ச்சியும் ஒற்றுமையும் மூச்சும் உயிரும் போலும் என்று தெளிவு படுத்தினார்கள். அவ்வடிப்படைகளைக்கொண்டு நம் மக்கள் தமிழ் நாடனைத்திற்கும் ஓர் மத்திய சங்கம் நிறுவி அதன் வழியாக நம் சமூக வளர்ச்சிக்கான வழி துறைகள் வரையறுக்கவேண்டுமென வற்புறுத்தினார்கள் இனி நம் பழக்க வழக்கங்களைத் திருத்தி அமைக்கவும், கல்வியில் மேம்பாடடையவும் அரசியலில் உரிய பங்கை எடுக்கவும், பொருளாதார வளர்ச்சியில் கண்ணுங் கருத்துமாயிருக்கவும், வேளாண் மக்களைத் தட்டியெழுப்பி அவர்கள் சமூகப் பணிக்கு வேளாளர் மடாலயங்களையும் பயன் படுத்திக் கொள்ளுமாறும் அங்கு குழுமியிருந்தோர் அனைவர் மனத்திலும் பசுமரத்தாணிபோல் பதியும்படி உரைத்தனர்.

மாநாடு திறக்கப்பட்டதும், வரவேற்புக் கழகத் தலைவர் திரு A. R. சண்முகம் பிள்ளை அவர்கள் தலைவர் அவர்களை தலைமை தாங்கக் கேட்டு முன் மொழிய அம்மை ஒய்வு பெற்றிருக்கும் வழக்கறிஞர் திரு. சிவஞானம் பிள்ளை அவர்கள் பின் மொழிய தலைவர் திரு. பி. தி. இராசன் அவர்கள் தலைமைப்பீடத்தில் அமர்ந்தனர். தலைவர்களுக்கு மக்கள் அன்பின் அறிகுறியாய் மாலைகள் சூட்டப்பெற்றன பின் தலைவர் அவர்களை வரவேற்று வரவேற்புக்கழகத் தலைவர் திரு. சண்முகம் பிள்ளை அவர்கள் வரவேற்புரை வாசித்தார்கள். உலகத்தோடொட்ட வொழுகாதததனால் வாழ்க்கையில் பொலிவில்லாது நம் மக்கள் வாழ்கின்ற உண்மையை வருத்தத்துடன் தெரிவித்து பிள்ளை அவர்கள் ஊக்கமுடையானுழை ஆக்கமதர் வினையச்செல்லுமாதலால் நாமும் தயக்கம் சிறிது மின்றி இனி முன்னேறிச் செல்ல வேண்டுமென்றறைந்து, முன்னேற வேண்டிய வழிகள் பலவற்றையும் வகுத்துக் காட்டினார்கள், இறுதியில் தலைவர், திறப்பாளர், கொடியேற்றுவித்த பெரியார், மற்றும் மாநாட்டுக்கு வந்திருந்த பெருமக்கள் அனைவருக்கும் நல்வரவு கூறி, பிள்ளையவர்கள் தன் வரவேற்புரையை முடித்தனர்.



வரவேற்புக் கழகதலைவர் திரு **A. R** சண்முகம் பிள்ளை அவர்கள் தலைவர்களையும் மாநாட்டுக்கு வந்திருந்தவர்களையும் வரவேற்றுப் பேசுகிறார்கள்.



வரவேற்புக் கழகத் துணைத்தலைவர் திரு K. A. சிவஞானம் பிள்ளை அவர்கள் மாநாட்டுத் தலைவர்களை வரவேற்றுப் பேசுகிறார்கள்.

தலைவர் அவர்கள் தலைமைச் சொற்பொழிவாற்ற ஒலிபெருக்கி முன் வந்ததும் மக்கள் அனைவரும் ஆரவாரத்துடன் கைதட்டினார்கள். வாழ்க இராசன் என எங்ஙனும் வாழ்த் தொலி எழுந்தது.இவ்வாரவாரம் அமர்ந்ததும் தலைவர் அவர்கள் முதுமையில் இளமை மிளிர இன உணர்ச்சி மீக்கூற தன் மேனாட்டுச் செலவு முதிர்ந்த அனுபவம் ஆகியவற்றிற் கண்ட மக்கள் முன்னேற்றத்துக்காய வழிகளைத் திறம்பட எடுத்துக் கூறி நீண்டதோர் சொற்பொழிவாற்றினர். அவர்கள் சொற் பொழிவில் உழவன் உலகத்துக்கு அச்சாணி என்பதை ப்ரெஞ்சு சக்கரவர்த்தி நெப்போலியன் போன்றாரின் வாக்குகளிலிருந்து எடுத்துக்காட்டி எவ்வாறு தேர்க்காலாணி துருப்பிடிப்பின் தேர் உருளாதோ, அது போன்று தவக்குலத்தொழிலாம் உழவால் தமிழ் மக்கட்கூட்டத்துக்கு அச்சாணி போன்று விளங்கும் வேளாளர்குலம் சீர்கெடும் எனின் தமிழ் மக்கள் கூட்டமே முன்னேறு தொழிந்து விடுமென்றும் வேளாளன் வாழ்வே தமிழினத்தின் வாழ்வு அவன் தாழ்வு தமிழினத்தின் தாழ்வு என் றும் சொன்னபொழுது கூட்டத்தினர் "கேளுங்கள் கேளுங்கள்" என்று கைதட்டினர் வேளாளர் சமூகம் முன்னேறுவதற்கு அவர்களிடை இருக்கும் இனப்பாகுபாடுகள் ஒழிதல் வேண்டு மென்பதையும் வாணிப முறையில் பெரும் ஆலைகள் நிறுவி பொரு ளாதாரத் துறையில் முன்னேறுவதற்கு மக்கள் முற்படவேண்டு மென்பதையும் கல்வித்துரையில் வேளாண் மக்கள், உரிய உயர்வை எய்துவதற்குப் பாடுபட வேண்டுமென்பதையும் கேட் போர் பிணிக்கும் தகைய வாய்த் தலைவரவர்கள் சொல்லி தன் தலைமைச் சொற்பொழிவை முடித்தனர்.

தலைவரவர்கள் சொற்பொழிவு முடிந்ததும் அண்ணா மலைப்பல்கலைக் கழகத்தமிழ் பேராசிரியர் திரு. ஜி. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் B. A , B. L., "நமது கடமை" என்னும் பொருள் பற்றி ஓர் அரிய சொற்பொழி வாற்றினர். தமிழ் மொழிக்கே பிறர்க்கு உபகாரியாம் தன்மையைச்சுட்டும் "வேளாண்மை என்னும் சொல்லை வேளாளரின் பிறர்க்கென வாழும் பெருந்

தகைமையை தந்தது எனின் தமிழ் மக்கள் வேளாளனின் ஒப்புரவு வாழ்க்கையை எவ்வாறு மதித்தனர், என்பதைக் காட்டுகின்றது என எடுத்துச்சொல்லி பேராசிரியரவர்கள் இன்று நாம் அத்தகைய வாழ்வு வாழ்கின்ருேமோ எனக்கூட்டத்தில் கேட்டபொழுது கூட்டத்தினர் தலைகவிழ்ந்தனர். அதனைக்கண்ட ஆசிரியர் தொடர்ந்து இன்று நாம் அதனை ஒருசிறிது மறந்திருக்கலாம் "ஆனல் இன்று நாம், அப்பண்பாட்டில் ஊறிய குடிப்பிறந்த நாம், அதனைத் திரும்ப எய்தியே தீருவோம், எனச்சூழ் செய்து நம் வாழ்வை சீர்கேடுறச் செய்த அழுக்காறு, உட்பிரிவு, மடி, சிற்றினஞ்சேர்தல் போன்றவைகளைக் களைந்துநற்பண்புகளுடன் கொண்ட புதியதோர் சமூக வாழ்க்கையை அமைக்க முற்படுவோமெனின் பண்டைய வாழ்க்கையை அடைவதற்கு ஐயமுண்டோ" என அறைந்து வேளாண் மக்களே! எழுமின்!! விழிமின்!!! பண்டைப் பெருமையை யடைமின்!!!! என வீறு கொண்டு முழக்கி முடித்தலும், மாநாட்டில் எழுந்த ஆரவாரம் வானைப்பிளக்கும் வண்ணம் ஒலித்தது.

பேராசிரியர் சொற்பொழிவுக்குப் பின் மறுநாள் மாநாட்டுக்குக் கொண்டுவரப் பெற்றிருந்த தீர்மானங்களை ஆய்ந்து தொகுக்க ஒரு ஆய்வுக்குழு (Subject Committee) தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆலோசனைக் குழுவினர் பெயரை இதில் இறுதியில் தொகுக்கப்பட்டிருகிறது, மேல்படி தேர்தலுடன் அன்று கூட்டம் முடிந்தது.

8—7—51 காலை 8 மணியிலிருந்தே ஆய்வுக்குழுவினர் மாநாட்டுப் பந்தலுக்கு வரத் தொடங்கி 9 மணிக்குள் அனைவரும் கூடினர். குறித்த நேரத்தில் கூட்டம், தலைவரவர்கள் தலைமையில் தொடங்கினது. தீர்மானங்கள் ஒவ்வொன்றும் தனித் தனியாக வாசிக்கப்பட்டு குழுவினர் ஆய்தலுக்கு விடப்பட்டது அவ்வாய்தலில் பலர் பங்கெடுத்தனர். சிலவைக்கு மறுப்புகள், சிலவைக்குத் திருத்தங்கள் முதலியன கூட்டத்தில் கொண்டு வரப்பட்டு இறுதியில் முழுமனதாய் 23 தீர்மானங்கள் நிறை

வேறின. அவைகளை இதில் தனியாய் சேர்க்கப்பட்டிருக்கிறது, தலைவரவர்கள் முடிவுரையில் தீர்மானங்களை நிறைவேற்றிய தோடு நின்றுவிடாமல் தமிழ் நாட்டுச் சங்க அமைப்பு ஏற் படுத்தப்பட்டிருக்கும் குழுவினர் விரைவில் அவ்வேலையைச் செய்து முடிக்க வேண்டுமென்றும் மற்றும் தீர்மானங்களில் கண்ட பணியிலும் மக்கள் உடனடியாக ஈடுபடும்படிக்கும் ஆலோசனைக் குழுவினரைக் கேட்டுக்கொண்டு கூட்டத்தை முடித்தனர்.

தீர்மானங்கள் நிறைவேறியதும் மாநாட்டுப் பொது நிகழ்ச்சி தொடங்கியது, அன்று முற்பகல் 12 மணியாய் பகலு ணவு நேரமாயிருந்தும் பந்தலில் குழுமியிருந்த மக்கட் செறி வைப் பார்த்த எவரும் வேளாண் மக்கட்கு அதுபோழ்து சமூக வளர்ச்சியிலிருந்த ஆர்வத்தை வியக்காமல் இரார், அன்றுசொற் பொழிவாற்றிய அம்மையார் இருவர்களும் திருவாவடுதுறை ஆதினப் பிரச்சாரகர்களாய் அமைந்தது, திறப்பாளர் குறிப் பிட்ட மடத்தார் நல்வாழ்த்தும் ஈடுபாடும் இனி வேளாள சமூ கத்தினருக்கு இருக்கும் என்பதைக் காட்டுவது போன்றிருந்தது, 'பெண்கள் முன்னேற்றம்' என்று எடுத்துக்கொண்டு வேளாண் பெண்மணிகளை ஆண் மக்களுடன் சம உரிமைபெற முன்வர வேண்டுமென்று தட்டி எழுப்பினர் திருமதி, சிவகாமி அம்மை யார் ஆண்மக்களுடன் பெண்மக்களும் வாழ்க்கைத்துறைகள் அனைத்திலும் பங்கெடுக்க வேண்டுமென்று வற்புறுத்தியது போன்றிருந்த அம்மையார் சொற்பொழிவுக்கு; அடுத்து வந்த திருமதி ஈசுவரவடிவம்மாள் அதனையே பொருளாகக் கொண்டு பெண்மக்கள் அன்புப்பணியை வாழ்க்கை இலக்காகக் கொண்டு சென்று பணி செய்கின்ற ஆண் மக்கட்கு அப்பணிகளில் அவர வர்கட்குத் துணையாய் நின்று பணி செய்யவேண்டுமென அழ குற மொழிந்து திருமதி சிவகாமி அம்மையாரின் சொற்பொழி வின் உண்மைப் போக்கை எடுத்துக் காட்டினர், வாழ்க்கைத் துறைப்போட்டிக்கு அழைப்பது போன்றிருந்த சிவகாமி அம் மையாரின் சொற்பொழிவுக்கு விரிவுரையாக பெண்கள் வாழ்க் கைத் துணை நலன்களே என அறிவித்து பெண்களும் ஆண்க ளும் வாழ்க்கைத் துறைகளை அவர்கள் உடல்நிலை மனநிலை சூழ் நிலை அமைப்புகளுக்கேற்பப் புகுந்து பெண்கள் பகுத்த துறை

களில் முன்னேற்றமடைவதையே பெண்கள் முன்னேற்றமாகக் கொள்ளவேண்டுமெனவும் திருமதி ஈசுவரவடிவம்மையார் எடுத்துக் கூறியதும் மக்கள் ஆரவாரித்தனர். அன்று பிற்பகல் மாநாடு கூடியதும், ஆலோசனைக் குழுவினர் முற்பகலில் முடிவு செய்த தீர்மானங்கள் மாநாட்டில் கொண்டு வரப்பட்டன, திருவாவடுதுறை ஆதினத்தார் சின்னப்பட்டத்தைத் தாமதமின்றி வைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதை ஒரு தனித்தீர்மானமாக கொண்டு வர மாநாட்டில் ஒரு சாரார் கருதி அதற்கு ஒரு தீர்மானமும் கொண்டுவந்தனர். ஆனால் ஆதினத்தார் அவ்விதம் விரைவில் வைத்துவிட ஒப்புக்கொண்டிருப்பதாலும், சமூகப் பெரியார் சிலர் ஆதீனத்தாரைக் கண்டு விரையில் அதை அமுலுக்குக் கொண்டு வர வேண்டுமென்று வேண்டிக் கொள்வதாய்ச் சொன்னதாலும் அதை ஒப்புக்கொண்டு அதற்கென ஒரு தனித்தீர்மானம் வேண்டாமென பல பெரியார்கள் கேட்டுக்கொண்டதின்பேரில் ஷி தீர்மானம் அதைக் கொண்டுவரப்பட்டவர்களால் மாநாட்டின் முடிவுக்கு விடாமல் நிறுத்திக்கொள்ளப்பட்டது. ஆய்வுக்குழு முடிவு செய்திருந்த தீர்மானங்கள் எல்லாவற்றையும் மாநாட்டினர் முழுமனதுடன் அங்கீகரித்து ஷி தீர்மானங்களை யெல்லாம் மாநாட்டில் நிறைவேற்றினர்,

அன்றுமாலை திரு. முத்துசிவன் அவர்கள் விரைவில் காரைக்குடி போகவேண்டியிருந்ததால் முதலில் சொற்பொழிவாற்றினர்கள் திரு. முத்துசிவனுர் சொற்பொழிவு முழுமையும் முத்துக்குறிப்பாகவே அமைந்தது. 'இலக்கியமும்பயனும்'என்று எடுத்துக்கொண்டு வெண்பா, குறட்பா, வஞ்சிகோவை எனப் பல இலக்கியத்துறைகளில் ஆங்காங்கு மூழ்கி இலக்கிய முத்துக்களை எடுத்து அவைகளை அன்னுர் விளக்கிக் காட்டியபொழுது மாநாட்டு மக்கள் பரவசமடைந்தனர். வழுக்கி வீழினும் கம்பனில் வீழ்ந்தும் தடுமாறினும் குறவஞ்சியைப் பிடித்தும் சருக்கி அமரினும் சங்க நூலினில் அமர்ந்தும் ஐயரை நாழிகைக்குமேல் ஆசிரியர் ஈந்த தமிழமுத வாரி மக்களை மதுவுண்ட வண்டுகளாக்கி அவர்கள் உள்ளங்களையெல்லாம் காவிய உலகினில் சஞ்சரிக்க வைத்துவிட்டது. அடுத்துவந்த அண்ணமலையாருக்கு அம்மக்களை இவ்வுலகத்துக்கு இழுத்துவரப் பெரும்பாடாய் விட்டது என்றே சொல்லலாம்.

ஆங்கில நாட்டுக்குஞ் சென்று மருத்துவப் பட்டம் பெற்ற மேனுட்டு மருத்துவரான டாக்டர் அண்ணுமலைப்பிள்ளை காவிய உலகத்தினின்றும் மக்களை இந்நாட்டில் 5000 ஆண்டுகட்கு முன்னிருந்த மோகற் ஐதாரோ ஹாரப்பா ஊர்களுக்கு ஈர்த்து சென்றனர், 5000 ஆண்டுகட்கு முன்னர் கங்கைக்கரையில் வேளாளன் மாண்புற வாழ்ந்தான் என்ற செய்தியைக் கேட்கும் எந்தவேளாளனுக்குத்தான் மெய்சிலிர்க்காது, உள்ளம் உவகையாற் பொங்காது? பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே வேளாளன் சீரிய வாழ்க்கை இலக்குகளுடனும் உயரிய பண்பாடுகளுடனும் அது போழ்து விளங்கின மக்கட் கூட்டத்துக்கோர் மாணிக்கமாய்த் திகழ்ந்தான் என்று டாக்டர் அவர்கள், ஷெ ஊர்களைத் தோண்டி எடுத்ததில் கிடைத்த பல்வேறு சின்னங்களிலிருந்தும் கல் வெட்டுகளிலிருந்தும் எடுத்துக்காட்டின பொழுதெல்லாம் மக்கள் ஆரவாரித்தனர். டாக்டர் அவர்கள் சொற்பொழிவானதும் ஒரு சிறிது ஓய்வுக்குப்பின் மீண்டும் கூட்டம் தொடங்கி சொல்லின் செல்வர் பேராசிரியர் திரு. R. P. சேதுப்பிள்ளை அவர்களின் சொற்பொழிவு நிகழ்ந்தது. தமிழர் நாகரீகம் வேளாளர் நாகரீகமே என வரலாற்றுப் பகுதிகளிலிருந்து மேற்கோள்களுடன் விளக்கிக்காட்டி வேளாளன் அழிந்தால் தமிழர் நாகரீகமும் அழியுமே எனச் சொன்ன பொழுது கேட்டோர் நெஞ்சு துணுக்குற்றது. தனக்கென வாழாவிட்டாலும் தமிழர் நாகரீகத்துக்காகவாவது வேளாளன் வாழ வேண்டுமெனப் பிள்ளை அவர்கள் கூறியபொழுது அங்கு குழுமியிருந்த மக்களனைவருமே கைதட்டி ஆரவாரித்தனர். வேளாளரின் பண்டைச் சிறப்பைச்சுட்டி, இன்றைச் சீர்கேட்டைக்குறிப்பித்து, இச்சீர்கேடு எதனல் என்பதையும் அவர்கள் வெள்ளிடைமலை போல் விளக்கிக் காட்டும்பொழுது வேளாளர்களிடையேயிருக்கும் வேளாளர், கார்காத்தார், முதலியார், செட்டியார் போன்ற பல பிரிவுகளையும், குழுக்களையும் ஒழிய வைக்கவேண்டுவதே பெருமக்களின் முதற் கடமையென்றனர். இவர்களில் ஒரு சில பிரிவினர் கொண்டாடும் கோத்திரப் பெருமை பொருளற்றதென்பதையும் அழகு பெறக்காட்டினர். தன் கோத்திரம் கொழுபடைக் கோத்திரம் என்றும், ஆங்கு மேடையில் அமர்ந்திருந்த தன் நண்பர் திரு. நெல்லையப்ப பிள்ளை அவர்கள் கோத்திரம் காலிங்கராயன் கோத்திரம் என்றும் இவ்விருபெயர்களிலும் புதை பொருள்கள் ஒன்றுமில்லையென்றும் தன் கோத்திரப் பெயரின் பொருள் உழுதுண்டு வாழ்பவர்

குலமென்றும், தன் நண்பர் கோத்திரத்தின் பொருள் உழுவித்துண்பவர் குலமென்றும் எனவே உழுபவர்க்கே இனி உலகமாதலால் தன் நண்பர் நெல்லையப்ப பிள்ளை அவர்களும் அவர்கள் கோத்திரத்தாரும் இனி, தனக்கும் தன் கோத்திரத்தாருக்கும் அடங்கி நடக்க வேண்டியதாய் விடுமென்று நகைச்சுவைத் ததும்பச் சொன்னபொழுது கூட்டத்தினர் அனைவரும் வயிறு வலிக்கச் சிரித்தனர். கைகொட்டினர். சமூகக் களைகளாய் விளங்கும் இவ்வுட்பிரிவுகளை ஒழிப்பதற்கு உட்பிரிவு கலப்பு மணத்தை ஆதரித்து, இறுதியாக என் கடன் பணிசெய்து கிடப்பதே என வேளாண் மக்கள் ஒவ்வொருவரும் இன்று சமூகப் பணி செய்ய முன் வரவேண்டுமென்று முழங்கி எல்லோரும் இப்பணியில் ஈடுபட வாரீர் எனச்சொற்பொழிவை முடித்த பொழுது கூட்டத்தில் இடைவிடா ஆரவாரமும், கைகொட்டுதலும் பந்தல் தெறித்து விடுமோ என ஒலித்தது. சொற்பொழிவு ஐந்து நாழிகைக்கு மேல் நிகழ்ந்திருந்தும், நொடிப்பொழுதில் பிள்ளையவர்கள் முடித்துவிட்டனரேயென்ற உணர்ச்சியே மக்களிடை நிலவியது.

தலைவர் மாநாட்டு நிகழ்ச்சிகளை முடித்து முடிவுரை நிகழ்த்து முன் மாநாட்டுக்கு வந்த வாழ்த்துக்கள் வாசிக்கப்பட்டன. தலைவர் அவர்கள் திரு. சேதுப்பிள்ளையவர்கள் வேளாண் மக்களை விறுகொண்டு சமூகப்பணிக்கெழும்படி விடுத்த வேண்டுகோளை மக்கள் மறக்காது சமூகப்பணியில் சிறப்பாக கல்வி, வாணிபம் ஆகிய துறைகளில் வேளாளர்கள் முன்னேறுவதற்காம் ஆக்க வேலைகளில் நாளையென்று ஒத்திவைக்காது இன்றே செய்ய முன் வரவேண்டுமென்றும், திறப்பாளர் அவர்கள் குறிப்பித்தபடி தமிழ் நாடனைத்துக்கும் ஓர் நடுச்சங்கத்தையும் நிறுவி அதனுடன் மாவட்டச் சங்கங்களையும் அமைத்து அவைகளை நடுச்சங்கத்துடன் இணைத்து ஷை சங்கங்கள் வாயிலாய் நாம் பணிசெய்வோமானால் நம் சமூகத்தினருக்கு அது பெரும் பயன் விளைவிக்குமென்று சொல்லி முடித்தனர். தலைவர், சொற்பொழிவாளர், வரவேற்புக்கமிட்டியார், பணியாளர் கூட்டத்தினர் ஆகியோரனைவருக்கும் நன்றி கூறப்பட்டு முடிந்ததும் வேளாளர் கல்விச்சங்க அமைச்சர் திரு. ஆனந்தம் பிள்ளை அவர்கள் மாநாட்டை அடுத்த ஆண்டு திருநெல்வேலிக்கு அழைத்தனர்.

இறை வணக்கத்துடன் மாநாடு இனிது முடிந்தது.



மாநாடு முடிந்தவுடன் தலைவர்களும் செயற்குழுவினர் சிலரும்.

## 8—7—51 தூத்துக்குடியில் நடைபெற்ற, திருநெல்வேலி மாவட்ட சைவ வேளாளர் சமூக மாநாட்டில் டாக்டர் Dr. அண்ணாமலைப் பிள்ளையவர்களின் சொற்பொழிவுக் குறிப்பு.

இராவ்சாகிப், 'சைவப்புலவர்' டாக்டர் தி. இரா. அண்ணாமலைப் பிள்ளையவர்கள் L. M. S. S. A. (Lond.) "வேளாளர் தொன்மையும் தமிழ் எழுத்துக்களும்" என்னும்பொருள் பற்றிப் பேசினார்கள். வேளாளர் என்னும் சொல் வேள் (மண்—Earth) என்னும் வேர்ச் சொல்லிலிருந்து வந்துள்ளது என்றும், நிலத்தைப்பாகுபடுத்தி, பயிர்செய்து, விளைவாற்றுதலே வேளாண்மையென்றும், வேளாண்மை நடத்தியவர்கள் வேளாளர் என்றும், பழந்தமிழர் வழிபாட்டில், திரு முருகக்கடவுளுக்கு '**செவ்வேள்**' என்னும் பெயர் வழங்கப்பட்டுவருகின்றதென்பதும், வேளாளரைப் பற்றிய குறிப்புக்கள் சங்க இலக்கியங்களிற் பல இடங்களிற் காணப்படுகின்றனவென்றும், இதற்கு சான்றாக, திருக்குறளில் "இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம், விருந்தோம்பி வேளாண்மை செய்தற்பொருட்டு" என்றும் தாளாற்றித்தந்த பொருளெல்லாம்தக்கார்க்கு வேளாண்மை செய்தற்பொருட்டு' என்றும் கூறிய இடங்களையும் எடுத்துக்காட்டினார்கள். இவ் இடங்களில், வேளாண்மை என்னுஞ்சொல் ஒப்புரவு, ஈகைத் தன்மை என்னும்பொருளில் உபயோகிக்கப்பட்டுள்ளன. திருவள்ளுவர் காலத்துக்கு பல நூற்றாண்டுகளுக்கு முந்திய தொல்காப்பியத்திலும், வேளாளரைப்பற்றிய குறிப்புக்கள் உளவென்பதை உரையாசிரியர்கள் நன்கு சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

தொல்காப்பியக் காலத்துக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே, இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன் **வேளாளர்** என்னும் சொல் நமது நாட்டில் நிலவி வந்துள்ளதென்பது சில ஆராய்ச்சியினர்களின் துணிபு. இவ் ஆராய்ச்சிக்கு ஊதவியாக வடமேற்கு இந்தியாவில் சிந்து நதிக்கரையில், மொகஞ்சதாரோ, அரப்பா என்னும் இடங்களில் தோண்டி எடுத்த **புதைபொருள்**

களில் நமக்கு கிடைத்துள்ள "சித்திர எழுத்துக்கள் மிக மிகப் பயன் படுகின்றனவென்றும், இச்சித்திர எழுத்துக்களின் நுட்பத்தை அறிவதில் தம்வாணுளையே ஈடுபடுத்திய, உலக ஞானியார் Rev. H. Heras (ஹீராஸ்) முனிவர் அளித்தருளிய குறிப்புக்களிலிருந்து "வேளாளரின் தொன்மை" அறியக்கிடக்கிற தென்றும் கூறினர்கள். ஸபெயின் தேசத்திற்றேன்றிய ஹீராஸ் ஞானியாரவர்கள் நம் நாட்டின் நற்றவப்பயனுல், இந்தியாவுக்கு வந்து, உலக சரித்திர வரலாறுகளிலும் பல்லாண்டுகளாக உழைத்தும் பல நூல்கள் வெளியிட்டுள்ளாரென்றும், "மொகஞ்சதாரோ—வேளாளர்கள்" என்னும் ஒரு சிறந்த உரையை, கல்கத்தா "The Indian Historical Quarterly Vol. XIV–1938 என்னும் வெளியீட்டில் பல சித்திர எழுத்துப்படங்களோடு பாதிரியார் சுவாமிகள் விளம்பரப்படுத்தியுள்ளார்களென்றும், இவ்வெளியீட்டில், "வேளாளர்" என்னும் சொல்லின் வரலாற்றை ஆராயும் ஒவ்வொருவரும் ஆழ்ந்து சிந்திக்கவேண்டிய பல குறிப்புக்கள் அடங்கியுள்ளன வென்றும் எடுத்துக் காட்டினர்கள். மேலும் மொகஞ்சதரோ காலத்திலேயே (4000-B. C.) 'வேளாளர்' என்னும் வகுப்பினர் மிக்கபண்புடைய நிலையில்வாழ்ந்துவந்தனர்; அக்காலத்திலேயே, வேல், முகில், குடை, மீன், பகல், ஆன், ஆனில், முருகன் முதலிய தனித்தமிழ்ச் சொற்களும் வழக்கில் இருந்தன; பழங்காலத்திருந்தே வேளாளருக்கு காராளர் என்ற பெயரும் இருந்து வந்தது என்றும் Heras பாதிரியார் சுட்டிக்காட்டியுள்ளதாக எடுத்துரைத்தார்கள். மேலும் மொகஞ்சதாரோவில் அகழ்ந்தெடுத்த பலபொருட்களுக்கும், நம்நாட்டின் பொருட்களுக்கும் தொடர்புகாணப்படுவது மிக வியப்பாக இருக்கிறது. ஆதிச்சநல்லூரில் தோண்டியெடுத்த மண் தாழிகளுக்கும், அங்கு (சிந்துவெளி) கிடைத்த மட்பாண்டங்களுக்கும் ஒற்றுமை காணப்படுகிறது. இன்று நம் ஊர்களில் காணப்படுவது போல் ஒரே வளவில் பல வீடுகள் அமைந்துள்ளன; நமது வீட்டில் இராட்டுகளுக்கு உபயோகப்படுத்திய பஞ்சுக்கதிர்கள் போல அங்கும் அகப்பட்டன. இன்னும் நம் நாட்டில் பூசிக்கப்பட்டு வரும் அரசமரமும்வேப்பமரமும் அங்கும்கண்டுபிடித்தனர். இலிங்கம், யானை

நந்தி, சங்கு, முருகர், சத்தமாதர், தென்முகக்கடவுள் (தட்சணா மூர்த்தி) முதலிய உருவங்கள் மலிந்துள்ளதாகக் காணப்படுவதையுங் கூறி இத்தகைய ஒற்றுமையடங்கிய நாகரிகத்தை நாம் ஆராய வேண்டியது நமது கடமையென்பதை வற்புறுத்தினார்கள். பின்னர் டாக்டரவர்கள் மொகஞ்சதாரோ காலத்து சித்திர எழுத்துக்களுக்கும், இன்று தமிழ் நெடுங்கணக்காய் வழங்கப்படும் எழுத்துக்களுக்கும் மாறுதல் உளவேனும், அவைகளைக் கூர்ந்துநோக்குவார்க்கு அவற்றுள் ஒரு அரிய தொடர்பு காணப்படுகிற தென்றும் கூறியதோடு, மொகஞ்சதாரோ காலத்திலேயே வேளாளர் பண்பட்ட நிலையில் வாழ்ந்து வந்தனர்களாயின் அதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே வேளாளர் நாகரிகம் தொடங்கி உச்ச நிலையைத் அடைந்திருக்க வேண்டு மென்றும், ஆதலின் வேளாளர் நாகரிகம் இற்றைக்கு பதினாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது என்று கூறுவது மிகையாகாது. என்றும், மொகஞ்சதரோ நாகரிகம், எழுத்துக்களைப்பற்றிய ஆராய்ச்சியில், வேளாளர்களும், மற்றும் சரித்திர இலக்கிய, மொழி ஆராய்ச்சியாளர்களும் பேரறிஞர் ஹீராஸ் தவமுனிவர் காட்டியவழியைப் பின்பற்றி, நடுவு நிலைமை தவறாது ஆய்ந்து முடிவு கட்டவேண்டும் என்றும், சோவாரும் சகத்திரே என்னும் நீதி மொழிக்கு இணங்க வேளாளர்கள் தமது வாய்மையும் பெருமையும் வாய்ந்த பழமையை உணர்ந்து, வேளாண்மை அல்லது சச்தியம் என்னும் பொருளுக்கு இலக்கியமாய் இலங்கி பிறர்க்கென வாழ்ந்து உலகுக்கோர் திலகமாய்த் திகழ்ந்து விளங்கும்படி திருவருட்டுணையை பரிந்து வேண்டினார்கள். தாமும் தமது ஆராய்ச்சிக் குறிப்புக்களை விரிந்த முறையில், தக்கவாய்ப்பு வந்துழி வெளிப்படுத்துவதாயும் கூறி, தமது உரையை முடித்தார்கள்.

திருநெல்வேலி மாவட்ட

# சைவ வேளாளர் சமூக மாநாட்டு

# வரவேற்புரை

### செந்தமிழ்ச் சைவப் பெருந்தகையோர்களே!

சைவ வேளாளரின் பல பிரிவினரும் ஒற்றுமைப்பட்டுக் கூடும் முதல் மாநாடு இதுதான் என்று எண்ணுகின்றேன். இது முதல்தர மாநாடாக மிளிர வேண்டும். இவ்வருமையான கூட்டத்தின் வரவேற்புக்குழுவின் தலைமை தாங்கி ஒரு இன்பம் தரும். கடமையை நிறைவேற்றும் பணி எனக்களித்த நன் மக்களுக்கு என் மனமார்ந்த நன்றி

## உலக நிலையும் சைவ மக்களும்

இப்பொழுதைய உலக நிலை பண்டைத் தமிழர் வாழ்ந்த காலத்தை நோக்கும்பொழுது மிக மிக வேறுபாடடைந்துள்ளது. வாழ்க்கைப் போக்கு பேச்சு, பொருள் வருவாய், பொருட் செலவு, பிறர் தொடர்பு, சமயக்கொள்கை, கல்வி, முதலிய பல துறைகளிலும் அடி பெயர்ந்த மாறுதல்கள் வந்துள்ளன. இவைகளோடு ஒட்டி இவைகளுக்கு எற்ப நம் இனத்தவர், படிப்பு மிகுந்தவர் கூட, முன்னேற்றத்தைக் கருதுகின்றார்களா? சிற்சிலர் கருதினும், செயல் முறையில் நிகழ்த்துகின்றார்களா என்று பார்த்தால் தயக்காமல் 'இல்லை' என்றே கூறலாம்.

## வாழ்க்கையின் பொலிவின்மை

உழவு, வணிகம், கைத்தொழில் முதலிய பணிகளில் நம் தற்சமய நிலை என்ன? எந்த சைவ வேளாளன் உலகு எங்கணும் பெயர் கூறும்படி வணிகனாகவோ, நில உரிமையுடையனாகவோ, தொழிற்சாலை முதலாளி யாகவோயிருக்கிறான்? இந்நிலை என் எற்பட்டுள்ளது? ஒருவன் பெரு மகனெனப் பிறரால் போற்றப்பட வேண்டுமானால் அவன் தன் இனத்தவரை உயர்த்தப் பாடுபடவேண்டும். பல பெரியார்கள் நாலா பக்கமும் விளக்கித்

தோன்றினால் அல்லவா ஒருவன் தலையாய இடத்தில் அவர்களால் தாங்கப்பட்டு நிற்க முடியும். இல்லையேல் அவனை யார் தாங்குவது ? தரையோடு தரையாய்ப் பிறரால் புறக்கணிக்கப்பட்டுக் கிடக்கத்தானே வேண்டும்? ஒற்றுமைக் குறைவாலும் உணர்ச்சிக் குறைவாலும் நாம் பலங்குன்றி மங்கிக்கிடக்கிறோம். நமக்குள் ஒற்றுமை வேண்டும், உணர்ச்சி வேண்டும், எழுச்சி வேண்டும், எழுதல் வேண்டும், வறட்டு வேதாந்த ஒழிப்பு வேண்டும், உண்மை உணராக்குறையைத் தகர்த்தல் வேண்டும், விடாமுயற்சி வேண்டும்.

## "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்"

வள்ளுவ மேலோன் செவியறிவுறுத்திய இவ்வருஞ் சொல்லுக்கு ஏற்ப மிளிர்ந்தால் அல்லவா இனம் முன்னேற முடியும். அறிவும் சூழ்ச்சித்திறனும் மிக்கார் வழித்தோன்றல்கள் அல்லவா நாம். நம் மரபில் அரும் பெரும் கவிகள் தோன்றவில்லையா? அப்பர், சேக்கிழார், சிவஞான சுவாமிகள், குமரகுருபரர், இராமலிங்க அடிகள் இவர்களின் வழித்தோன்றல்கள் அல்லவா நாம்? நமக்கு அறிவில்லையா? ஆண்மையில்லையா? பொருளில்லையா? ஏனைய துணைக்கருவிகள் தாம் இல்லையா? இவையெலாம் இருந்தென்? ஊக்கம் இல்லாதவர்கள் கைக் கொண்ட பொருள் பொருளாகுமா? ஊக்கம் உடையாரை நோக்கி ஆக்கம் வழி கேட்டு நடந்துகொண்டிருக்கிறது. எத்தகைய சிதைவு நமக்கு வந்துவிட்டாலும், புண்பட்ட ஆண்யானை அப்புண்ணைப் பொருட்படுத்தாமல் போரில் முன்னேறிச் சென்று வெற்றி காண்பதுபோல் நாமும் நம் தற்போதைய நிலையைக் கருதாமல் முன்னேறுதல் தகுதியாகும்.

> "சிதை விடத்து ஒல்கார் உரவோர், புதை அம்பில்
> பட்டுப் பாடு ஊன்றும் களிறு"

இவ்வறிவுரையை நன்கு ஓர்ந்து மேற்கொண்டு பணியாற்றவே நாம் இங்கு குழுமியிருக்கிறோம். இந்நகரமே அதற்கு வாய்ப்புரை பகர்கிறது. திருமந்திரத்தின் ஒரு சார் பெயர்கொண்ட இந்நகரம், எந்த இடையூறுகளையும் பொருட்படுத்தாத சைவ நல்லாண் மகன் ஒருவன் தன் எண்ணத்தின் அலைகளை வீசி, ஊக்கம் குன்றுத பெருமிதச்செயல் கண்டது. கப்பல் ஓட்டினார் அப் பெருமகனர் காலத்துக்கேற்ப. இந்நகரே அவ்வண்ணல் பெயரால் கல்லூரி ஒன்றையும் அண்மையில் கொண்டுள்ளது. இங்கே இம் மாநாடு கூடுவது மிகப் பொருத்தமே. இதன் தூண்டுதல் கொண்டவர்கட்கு உங்கள் எல்லார் சார்பாகவும் நன்றி கூறுகிறேன்.

## முன்னேற வேண்டிய வழிகள்

சைவ வேளாளரின் பெருந்தன்மைகள் பல. விருந்தினரைப் பேணுதல் முதன்மையானது. இன்னும் போற்றத்தக்க தனி வாழ்க்கை நலங்களும்

பண்பும் அமைந்தவர்கள். இத்தகைய பண்பே பற்றுக்கோடாக நிலக்க வழிகள் பல நாம் காணவேண்டும்.

1. உட்பிரிவுகள் ஒழிந்து இனவலி பெறுதல்.
2. காலத்துக் கேற்பக் கல்வி வகைகள் பரவுதல்.
3. தலையாய உழவுத்தொழில முன்னின்று நடத்தல்.
4. வணிகம் உலகெலாம் சென்று பரவும் விரிவடைதல்.
5. அரசியல் உரிமை உணர்ந்து உரிய பங்கு பெற்றுயர்ந்து வாழ்தல்.
6. இனத்துள் சச்சரவு எழாமலும் எழுந்த விடத்து அஃது அழிந் தொழியுமாறும் பணிபுரிதல்.
7. ஒருங்கு கூடி பொதுமைப் பொருள் நில வளர்த்தல்.
8. நம் சமய நிலயங்களாகிய மடாலயங்களின் உயரிய நடை முறைகட்கு உரிமையுடன் ஆவன செய்தல்.
9. திருநெல்வேலி வேளாளர் கல்வி அபிவிருத்தி சங்கத்தின் கீழ் மாவட்டமெங்கும் பல கிளகள் அமைத்து நம் செல்வ நிலையை வளர்த்தல்.
10. தொண்டாற்றக் கிளக் கழகங்கள் பல நிறுவல்.
11. இனப்பணிக்கு இன்னும் காலத்துக் கேற்ப வேண்டுவன முன் வந்து பேணிச்செய்தல்.

இவை போன்ற பல ஆராய்ந்து தொண்டாற்றவே இம் மாநாடு வழி கோலுகிறது.

## சபை அமைப்பின் செல்வாக்கும் அறிகுறிகளும்

மேல் நாடுகள் சென்று மக்கள் வாழ்க்கைத் திறத்தின் சீர்மைகள் கண்டறிந்து நேரிய கல்வியறிவும் அரசியல் ஞானமும் அனுபவமும் வள்ளன்மை யும் செல்வமும் செல்வாக்கும் ஒருங்கே அமையப் பெற்று இன்று நமது இக் கூட்டத்தை அணிபெறச் செய்து தலைமை தாங்கும் திரு. சர். பி. டி. ராஜன் அவர்களை இச் சபையின் சார்பாக மனமுவந்து வரவேற்கிறேன். இம் மாநாட்டைத் திறந்து வைக்க முன் வந்திருக்கும் இராசபாளையம் பண்ணையார் திரு. ராவ் பகதூர் ஆர். வி. இராம சுந்தரம் பிள்ளை அவர்களையும் நம் வேளாளர் சமூகக் கொடியை ஏற்றிய கும்பகோணம் நகர மன்றத் தலைவர் திரு. M. C. S. ரத்தின சபாபதி செட்டியார் அவர்களையும் இன்னும் நம் உயர்வையே பொருளாகக் கொண்டு இங்கே கூடியிருக்கும் நன் மக்கள் நம் மக்கள் யாவரையும் பேராவலுடன் வரவேற்கிறேன்.

தூத்துக்குடி
7—7—1951

A. R. சண்முகம் பிள்ளை
வரவேற்புக் கழகத் தலைவர்.

ஹிலால் பிரஸ், திருநெல்வேலி

திருநெல்வேலி மாவட்ட

சைவ வேளாளர் சமூக மகாநாடு

தூத்துக்குடி.

7–7–1951.



திறப்பாளர்:

இராவ்பகதூர் R. V. இராமசுந்தரம் பிள்ளை அவர்கள்

பண்ணையார், இராஜபாளையம்.

சகோதரர்களே!

மகாநாட்டை திறந்துவைக்கும் பணி எனக்கு கொடுக்கப் பெற்றது. கடமையெனக் கருதி களிப்புடன் ஏற்றேன். உங்களையெல்லாம் இங்கு ஒருங்கே பார்க்கும்பொழுது உண்மையிலேயே ஒரு புது உற்சாகம் ததும்புகிறது நமது சமூகத்தவர்களிடம் இப்பொழுதேனும் ஒரு விழிப்பேர்ப்பட்டதைக் காண பெருமகிழ்ச்சியடைகிறேன். இச்சந்தர்ப்பத்தில் எனது உள்ளத்தில் தோன்றும் சில எண்ணங்களைக்கூற ஆசைப்படுகிறேன். அதற்குமுன், இந்த ஒரு நல்ல சந்தர்ப்பத்தை எனக்குக் கொடுத்த வரவேற்புக் கமிட்டியாருக்கு எனது வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு—தமிழ் இவைகளின் தொன்மையையும் பெருமைமையும் வரையறுத்துக்கூற இயலாது. இதேமுடிவு சைவத்திற்கும் வேளாளர்களுக்கும் பொருந்தும். வேளாள மரபினர் தமிழ்நாட்டில் இன்று—நேற்றுத் தோன்றியவர்களல்ல, புராதனப் பெருங்குடி மக்கள் பெருமையுடன் விளங்கிய மரபினர்.

வேளாள மக்கள் பண்டைக்காலத்தில் பெற்றிருந்த சிறப்புகள், பொருளாதாரத் துறையில் அடைந்திருந்த முன்னேற்றம்; கல்வித் துறையிலும், கலைத் துறையிலும் பெற்றிருந்த பேறறிவு; வாணிபத்தில் கண்ட வெற்றி; விவசாயத்தில் அடைந்திருந்த மேன்மை; இவைகளைக்குறித்து எவ்வளவு வேண்டுமானாலும் பேசிக்கொண்டே போகலாம், இலக்கியங்களிலிருந்து மேற்கோள்களை எடுத்துக் காட்டலாம்; கல்வெட்டுகளில் காணும் கீர்த்திகளைக் கூறலாம், சாசனங்களில் மறைந்துகிடக்கும் மேன்மைகளை உங்கள்முன் சமர்ப்பிக்கலாம், ஆனல் எனக்கு அதில் விருப்பம் கிடையாது பழம் பெருமை பேசியது போதும். இனியும் அது நம்மில் நீடிக்கக்கூடாது பழம் பெருமைகளை நினைத்து பூரிப்படைவதில் தவறில்லை ஆனல் அந்தப்பெருமை எண்ணத்திலேயே தன் நிகழ்காலத்தை மறந்துவிட்ட சமூகத்திற்கு தாழ்வுதான். அதற்குப்பதிலாக பழம் பெருமையை நமது இன்றைய நிலையை உயர்த்துவதற்குப் பயன்படுத்தவேண்டும்.

ஒரு சமூகம் எவ்வளவு சரித்திரப் பெருமையுடையதாக இருந்தாலும் எவ்வளவு புராதனமிக்கதாக இருந்தாலும், அந்த சமூகம் காலத்திற்கேற்றவாறு தன்னைப் புதுப்பித்துக்கொள்ளா விட்டால் அது சமுதாயத்தில் அதற்குரிய அந்தஸ்த்தைப் பெறமுடியாது இந்த உண்மையை இன்று நாம் அனுபவத்தில் காண்கிறோம். சற்று சிந்தித்துப் பாருங்கள், சென்ற தலை முறையில் எவ்வளவோ பிற்போக்காக இருந்துவந்த சமூகங் களில் பல இன்று சகல துறைகளிலும் பிரமிக்கத்தக்க அளவில் முற்போக்கடைந்து விளங்குகின்றன. பொறாமை உணர்ச்சி யுடனோ அல்லது துவேஷ மனப்பான்மையிலோ கூறவில்லை, ஆனால் அது நமக்கு ஒரு படிப்பினையாக இருக்கவேண்டுமென் பதை எடுத்துக் காட்டுவதற்காகவே கூறுகிறேன்.

சமூக வளர்ச்சிக்கு இன உணர்ச்சியே மூச்சு, ஒற்றுமையே உயிர், ஒற்றுமையையும் இனப் பற்றுங்கொண்ட சமூகங்கள் இன்று சமுதாயத்தில் எவ்வளவு உச்சநிலையை எட்டிவிட்டன என்பதைப்பற்றி சிந்தித்துப் பாருங்கள். நமது மேன்மைக்கும் முன்னேற்றத்திற்கும் ஒற்றுமையும் இனப்பற்றும் அச்சும் ஆணியுமாகுமென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்த இரண்டும் நம்மவரிடை போதியஅளவு ஆக்கம் பெறவில்லை என்பதை மூடி வைப்பதில் பயனில்லை. நம்மில் பல உட்பிரிவுகளும், பிற பிரிவுகளும் இருந்துவருகின்றன. இவைகளுக்கெல்லாம் முற்றுப்புள்ளி போடுவதை இனியும் தாமதப்படுத்தலாகாது. அற்ப வேற்றுமைகளை அறவே களைந்துவிட்டு சைவ வேளாளர்கள் அனைவரும் ஒரே அணியில் வரவேண்டும் இந்த ஒற்றுமை உணர்ச்சியை ஓங்கச்செய்து இனப் பற்றுதலைப் பெருக்குவதே நமது முதல் வேலையாக இருக்கவேண்டும். ஒற்றுமை, இனப்பற்றுதல் இந்த அடிப் படை பலமுள்ளதாக இருந்தால்தான், முன்னேற்றம் காரிய சாத்தியமாக முடியும் இல்லையேல் அஸ்திவாரம் இல்லாத கட்டிடம்தான்.

ஒற்றுமையும், இனப்பற்றும் ஒன்றிரண்டு தனிப்பட்டவர் களால் சமூகத்தில் உரம்பெறச் செய்துவிடமுடியாது ஸ்தா

பன மூலமாகவே இயலும். ஸ்தாபன அமைப்பின்றி ஒன்றும் செய்யமுடியாது. நமது சமூகத்திற்கென ஒரு ஸ்தாபனம் நிறுவி எந்த அளவிற்கு அதைக்கட்டி வளர்க்கிறோமோ அதைப் பொறுத்தே நமது எதிர்காலம். நமது சமூக சபை ஒரு கட்டுக்கோப்புடன் இதுவரையும் பரந்த அளவில் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை ஏதோ அங்கொன்று இங்கொன்றுக ஒன்றிரண்டு சங்கங்களைக் கண்டு திருப்திகொள்ள முடியுமா? தமிழ்நாடு முழுவதற்கும் பிரதிநிதித்துவம் கொள்ளும் தன்மையில் ஒரு பலம்பொருந்திய மத்திய சபை நிறுவப்படவேண்டும் முதலில் நெல்லை மாவட்ட மத்திய சபையாவது உடனடியாக நிறுவப்படல் வேண்டும். இதன் கிளைகள் ஒவ்வொரு ஊரிலும் இயங்கவேண்டும் ஒவ்வொரு சைவ வேளாளனும் இதில் அங்கம்பெற வேண்டும். மத்திய சபை ஜீவன் நிறைந்து விளங்கவேண்டும் இந்த மகாநாட்டில் இதற்கான வழி துறை வரையறுக்கப்பட்டு வெற்றிகாண வேண்டுவது நமது முக்கிய வேலை என்பதை நாம் ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

மத்திய சபை நமது பொது மேடை அரசியல் அபிப்பிராய பேதங்களோ அல்லது கட்சிக் கொள்கை வேற்றுமை இதில் குறுக்கிட நியாயமில்லை. வேளாளர் என்ற தன்மையில் ஒன்று பட்டு பணியாற்ற முன்வரவேண்டும் சில சமூகத்தவர்கள் அரசியலில் கடும் அபிப்பிராய பேதமுள்ளவர்களாயிருந்தும், அவைகளை எல்லாம் வெளியில் வைத்துவிட்டு சமூக சபையில் தீவிர பங்கு எடுத்து மிகச் சிறந்த முறையில் பணியாற்றி வருவதை நாம் பார்க்கிறோமல்லவா. மத்திய சபையை அமைத்து அதன்மூலம் திட்டமிட்டு நல்ல முறையில் பணியாற்ற இன்னமும் காலந்தாழ்த்துவோமேயானல் நமது சமூகம் சமுதாயத்தில் பின்வரிசைக்குத் தள்ளப்படும் என்பதை வினய பூர்வமாக எச்சரிக்க விரும்புகிறேன்.

சமூகத்துறையில் பல சீர்திருத்தங்களை நாம் செய்தாக வேண்டும். பல பழக்கவழக்கங்கள் நம்மிடை எப்படியோ புகுந்துவிட்டன. இவைகளையெல்லாம் நமது புராதனக்கொள்

கைகள் என்று தவருக முடிவுகட்டியிருக்கிறேம். இவைகள் இடைக்காலத்தில் புகுந்தவை நமது பண்பாட்டிற்கும் நாகரீகத்திற்குமே புறம்பானவை இவைகளை களைந்தெறிய முற்படவேண்டும் திருமணம் போன்ற சடங்குகளில் அளவுக்குமீறி விரையம் செய்யும் வழக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தாகவேண்டும். சமூகப் பெரியவர்கள் இதைச் செயலில்காட்ட முதலில் முன்வரவேண்டும் நமது சமூகத்தவர்களின் பொருளாதாரச் சீர்குலைவுக்கு வேண்டாத சடங்குகளே பெருங் காரணமாக் இருக்கின்றன.

கல்வித்துறையில் நமது சமூகத்தில் பொதுவான முன்னேற்றம் காணப்படுகிறதென்றாலும் பெருமைப்படத்தக்க அளவில் இல்லை. ஒருசில உயர்தரப் படிப்பாளர்களையும் ஒன்றிரண்டு உயர்ந்த உத்தியோகத்திலிருப்பவர்களையும் கண்டு நாம் திருப்திகொள்வது தவறு. நூற்றுக்கு நூறு வெற்றிகாணவேண்டும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக நமது சமூக மாணவர்களின் முன்னேற்றம் தடைபடக்கூடாது. திறமையுள்ள மாணவன் முன்னேற அவனுக்கு சகல வசதியும் செய்துதர சமூக சபை தயாராக இருக்கவேண்டும். அதற்கான திட்டம் இன்றியமையாதது.

இப்பொழுது ஓரளவிற்குப் பணியாற்றிவரும் வேளாளர் கல்வி அபிவிருத்திச் சங்கத்தை மேலும் பலப்படுத்தவேண்டும். பல கிளைச் சங்கங்களை ஆங்காங்கே நிறுவி பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு பரிபூர்ண பாதுகாப்பு அளிக்கச்செய்யவேண்டும்.

இங்கு நமது முன்னுள்ள மற்றொரு முக்கிய வேலையைக் குறிப்பிட விரும்புகிறேன். நமது கல்வி அபிவிருத்திக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் முழு ஆதரவையும் உதவியையும் பெற சைவ மடாலயங்களை அணுகவேண்டும். அந்த உரிமை நமக்குண்டு நமது வணக்கத்திற்குறிய ஆதீன கர்த்தாக்கள் வெகு தாராளமாக உதவி புரிந்துவரும் இந்த நேரத்தை நாம் பயன்படுத்திக்கொள்ள தவறக்கூடாது. மத்தியசபை உடனடியாக இதில் கவனம் செலுத்தவேண்டும் இதே சமயத்தில்

உங்கள் சார்பில் வணக்கத்திற்குரிய மடாலயத்தார்களுக்கு எனது பணிவான விண்ணப்பத்தையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நமது மதிப்பிற்குரிய மடாலயத்தார்கள் சைவ சமய முன்னேற்றத்திற்கு மனப்பூர்வமான சகல உதவிகளையும் வெகு தாராளமாகச் செய்ய முன்வரவேண்டும் கல்வித் துறையில் நமது மாணவர்களுக்கு மடாலயத்தார்கள் எவ்வளவோ உதவிபுரிய இயலும். நம்மவர்கள் பெருந்தளவில் வசிக்கும் ஒவ்வொரு ஊரிலும் ஒரு உயர்தரக் கலாசாலை நிறுவுவது மடாலயத்தார்களுக்கு முடியாத காரியமல்ல. ஒவ்வொரு மாவட்டத்திலும் சைவக் கல்லூரியையும் காணலாம். இந்த முயற்சியில் இறங்கி பயன்பெற இந்த மகாநாடு மடாலயத்தார்களை அணுக ஒருமுடிவு செய்யுமென்று நம்புகிறேன்.

எந்த ஒரு இனமோ அல்லது சமூகமோ அல்லது ஒரு பிரிவினரோ இன்றைய நிலையில் அரசியலில் அலட்சியங்கொள்ள முடியாது அரசியலில் மிக உன்னத ஸ்தானத்தைப் பெற்று பெருமையுடன் விளங்கிய சமூகம் நமது சமூகம். பண்டையக் காலத்திலிருந்தே நம்மவர்கள் அரசியலில் கேந்திர புருஷர்களாக விளங்கி வந்திருக்கிறார்கள். ஆனால் இன்று அரசியலில் நம்மவர்கள் கை தாழ்வுற்று வருகிறது. இது தவிர்க்கப்பட வேண்டும். ஜனநாயக ஆட்சி நடைபெறுகிற இக்காலத்தில் அரசியலில் ஆர்வங்கொள்ளாமல் இருக்கக்கூடாது. தட்டினால்தான் திறக்கும். கேட்டால்தான் கிடைக்கும் ராமன் ஆண்டாலென்ன அல்லது ராவணன் ஆண்டாலென்ன என்ற மனப்பான்மை நம்மைவிட்டு நீங்கினால்தான் ஜனநாயக ஆட்சியில் நமக்குரிய பங்கைப் பெறமுடியும். இங்கு நான் அரசியலில் பங்கு கொள்ள உங்களை அழைப்பதாக நினைக்கக்கூடாது. ஆனால் அரசியலில் உன்னிப்பாக இருக்கவேண்டும் இல்லையேல் எதிர்காலத்தில் நாம் உதாசீனப்படுத்தப்படுவோம்.

நமது சமூகப் பொருளாதார நிலை மகிழ்ச்சிகொள்ளத் தக்கதாக இல்லை. ஏதோ சில பெருந்தனக்காரர்கள் இருக்க

லாம். இதனால் சமூகம் பொருளாதார ஸ்திரத்தன்மை உடையதென்று கூறமுடியாது நமது சமூகத்தவர்களில் உயர்தரக் கல்வி கற்றவர்கள் உத்தியோகங்களில் புகுந்துவிடுகிறார்கள். பெருந்தனக்காரர்கள் முழுக்க முழுக்க விவசாயத்துறையில் ஈடுபட்டுவிடுகின்றனர். இந்நிலையால் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கு ஒரு பயனும் கிடைக்க வழியில்லாமல் போய் விடுகிறது. இவர்கள் தொழில் துறையில் திரும்பவேண்டும். வாணிபத்தில் தீவிரமாக ஈடுபட முன்வரவேண்டும். நம்மவர் வர்ணிபமும் தொழிலும் வளம் பெற்று விளங்க நம்மவர் பாங்கிகள் தோன்றவேண்டும். குமாஸ்தாக்களாகச் செல்லும் சமூக இளைஞர்களை தொழில் நிபுணர்களாக்கவேண்டும். நமது சமூகம் தொழில் துறையிலும் வர்த்தகத்துறையிலும் மிகவும் பிற்போக்கு நிலையிலிருக்கிறதென்பதை மறைக்க விரும்பவில்லை. இந்நிலை மாறியாகவேண்டும். வர்த்தகத்தையும், தொழிலையும் கைவிட்டு விட்டு பொருளாதார முன்னேற்றம் வேண்டுமென்று இன்று கூறமுடியாது. எவ்வளவு தூரம் வர்த்தகமும் தொழிலும் நம்மிடம் வளர்கிறதோ அதைப் பொறுத்ததே நமது பொருளாதார முன்னேற்றம் நமது சமூகத்தவர்கள் உத்தியோகத்திலும், விபசாயத்திலும் கொண்டுள்ள ஆர்வத்தை தொழில் வளர்ச்சியிலும் வாணிபத்திலும் காட்ட முன்வரவேண்டும்.

நமது சமூகத்தின் எதிர்காலம் இளைஞர்களது கையிலேயே உள்ளது. இவர்களே எதிர்கால சிற்பிகள். இளைஞர்களது சிந்தனைகள், சீரிய முயற்சிகள் இவைகளே வருங்காலத்தை உருவாக்கப்போகின்றன. இளைஞர்கள் முனைந்து முன்வந்தால் தான் நாம் காணும் சமூக மேம்பாட்டை காரியசாத்தியமாக்க முடியும். நமது இளைஞர்கள் தங்களது மகத்தான பொறுப்பை உணர்ந்து முன்வரவேண்டும். நமது இளைஞர்கள் சமூகத்தில் ஒரு புதிய உத்வேகத்தை உண்டாக்க உறுதிகொள்ளவேண்டும். இளைஞர்களது முயற்சிகளுக்கு நமது பரிபூர்ண ஆதரவைக் கொடுக்கவேண்டும்.

சகோதரர்களே !

இதுவரை எனது மனதில்பட்ட உண்மைகளைக் கூறினேன். தலைவரவர்கள் பேருரையைக் கேட்கப் போகிறீர்கள். மற்றும் பல பெரியார்கள் கூறப்போகும் அறிவுரைகளையும் கேட்பீர்கள். இவைகளை எல்லாம் ஆராய்ந்து ஒரு நல்ல திட்டத்தை நமக்கு இம்மகாநாடு தரவேண்டும் அதனை நாம் நடைமுறையில் நிறைவேற்றத் தயாராக இருக்கவேண்டுமென்று உங்கள் எல்லோரையும் வணக்கத்துடன் கேட்டுக்கொண்டு இம்மகாநாட்டைத் திறந்துவைக்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

தூத்துக்குடி,
7—7—51.

R. V. இராமசுந்தரம் பிள்ளை,



சைவப்பிரகாசம் பிரஸ், தூத்துக்குடி :—7–51

**வேளாளர் கல்வியபிவிருத்தி சங்கம்.**

வண்ணார்பேட்டை, திருநெல்வேலி.

வேளாளர் கல்வியபிவிருத்தி சங்கத்திற்கு சந்தா, நன்கொடை, முதலியவைகள் கொடுத்து சைவவேளாள மாணவர்களின் கல்வியபிவிருத்திக்கு உதவுங்கள்.

தேவி பிரஸ், தூத்துக்குடி.